DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 9/2025 |
| Deposition of witness | : | PW-9 |
| Name | : | சங்கீதா |
| Father's /Husband Name | : | கமலநாதன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 45 |
| Occupation | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 30th day June 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.11.2024 காலை 08.00 மணிக்கு நன்னிலம் காவலல் நிலைய பொறுப்பிலிருந்தபோது மல்லிகா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று நன்னிலம் காவல் நிலைய குற்ற எண். 331/24 சட்டப்பிரிவுகள் 331(3), 309(4) BNS - ன் படி முதல் தகவலறிக்கை உதவி ஆய்வாளர் கோபிநாத் என்பவர் மூலம் பதிவு செய்து எனது பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 29.11.2024 ம் தேதி காலை 09.12 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் இரத்தினசபாபதி, முத்துக்கிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அவை முறையே **அ.சா.ஆ. 9** மற்றும் **அ.சா.ஆ. 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு சாட்சிகள் 1 முதல் 5 வரை ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான ஸ்ரீராம் என்பவரை 29.11.2024-ம் தேதி காலை 11.30 மணிக்கு ஸ்ரீவாஞ்சியம் கடைத்தெருவில் இருந்தவரை அடையாளம் கண்டு பின்பு காரணம் கூறி சாட்சிகள் சிதம்பரம், ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாக தகவல் வந்ததாலும் அவரை கைது செய்து விசாரித்தபோது அவர் தாமாக முனவந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

அந்த ஒப்புதல் வாக்குமூலுத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் **அ.சா.ஆ. 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மதியம் 1.00 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் இவ்வழக்கின் எதிரியான ஸ்ரீராம் என்பவர் அடையாளம் காட்டி ஆஜர் செய்த S கொக்கி விலகிய நிலையிலுள்ள தங்க சங்கிலியுடன் நூலால் சேர்த்து கட்டப்பட்ட இரண்டு தங்க தகடுகளுடன் மொத்த எடை 9.770 மிலி. கிராம் எடையுள்ளதை கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ. 12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் மல்லிகா என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் ஸ்ரீதர் மற்றும் சிதம்பரம் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றப்பட்ட தடயத்தை படிவம் எண். 91 ன் மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதற்கு வழக்கு சொத்து எண். 4/25 என பெற்று வந்தேன். அந்த படிவம் எண். 91 **அ.சா.ஆ. 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் எனது விசாரணையை முடித்து வழக்கின் கோப்பினை நன்னிலம் காவல் நிலைய ஆய்வாளர் விடுப்பு முடித்து பணிக்கு வந்ததால் அவர் வசம் ஒப்படைத்தேன்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

சம்பவ தினத்திலிருந்து மூன்று நாட்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டதென்றால் சரிதான். புகாரிலும் அ.சா. 1 ன் வாக்குமூலத்தில் நகை பறித்தவரின் அங்க அடையாளங்கள் குறித்தோ வயது குறித்தோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கருப்பு கோட் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 ன் முன்னிலையில் எதிரியை கண்டுப்பிடிப்பதற்கான அடையாள அணிவகுப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 மருத்துமனையில் சிகிச்சை பெற்றதற்காக ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்றே அ.சா. 1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றல் இல்லை. சம்பவத்தன்றே நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் இல்லை. சம்பவ இடத்திலுள்ள சிசிடிவி பதிவுகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 ன் வாக்குமூலத்தில் எதிரி எனது வீட்டிற்கு வந்து நார்காலியில் அமர்ந்ததாகவும், அ.சா. 1 ன் கண்ணத்தில் அறைந்ததாகவும், வாயில் துணியை வைத்து அமுக்கியதாகவும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரி எந்தவிதமான ஒப்புதல் வாக்கமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதில் எதிரியிடம் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறாததன் காரணமாக தான் அவரிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் ஆகியோரின் வாக்மூலங்கள் காவல் நிலையத்தில்வைத்து பதிவு செய்யப்பட்டதாக வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியை

சொன்ன நாள் நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து சான்று பொருள் எதையும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S
BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN,
ou=TIRUVARUR, o=TAMIL NADU
STATE JUDICIAL SERVICE,
st=Tamilnadu, c=IN
Date: 2025.07.28 17:38:28 +0530